www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

0-2-1985

## உதிர்விலும் உரம் காண்போம்

அரச பயங்கரவாதிகளின் மிலேச்சத்தனமும் அடாவடித்தனங்களும், இன்னும் தொடர்ச்சியான அடக்குமுறையின் கோரமும் கொடுமைகளும், இப் பூமியைத் தினம் தினம் சங்காரம் செய்யும் இவ்வேளையில், தம் குருதியை இம் மண்ணிற்கு ஈந்து மரணித்துப்போன எமது இயக்க தோழர்களின் தற்தியாகமும் விரிவான பங்களிப்பும் தீரத்துடன் நோக்கப்படவேண்டியனவே.

தமிழீழமெங்கினும் பரந்துபட்ட எமது கெரில்லா தளங்களில் ஒன்று (ஆவரங்கால்) எம்மால் முழுமையாக இனம் காணப்பட்ட ஒரு துரோகியால் 9-1-85 அன்று நேரடியாக காட்டிக் கொடுக்கப்பட்டு, ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவ வாகன சகிதம் வந்த பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரால், மூன்று காவல் சுற்றுகளிடப்பட்டு முற்றுகையிடப்பட்டது. இந்நிலையில் இடம் பெற்ற நேரடி மோதலில், பல எதிரிகளைக் கொன்றழித்த எமது வீரத் தோழர்களில் அறுவர் காயம் பட்டநிலையில் எதிரியிடம் உயிருடன் பிடிபடுதல் கூடாது என்ற இயக்க மரபிற்கிணங்க தம்மைத் தாமே அழித்துக்கொண்டனர். ஏனையோர் தம் ஆயுதங்களுடன் முற்றுகையை உடைத்து வெளியேறினர்.

பண்டிதர் அல்லது இளங்கோ எனப்படும் (கப்டன் ரவீந்திரன்-கம்பர்மலை) உட்பட நேரு (தில்லைச்சந்திரன்-அரியாலை) சாமி (தவரத்தினம்-ஆவரங்கால்). தவா (தவராஜா-அச்சுவேலி). சிவா (சிவேந்திரன்-ஆவரங்கால்), ரவி (பிரதாபன்-கல்வியங்காடு) ஆகிய அறுவருமே வீரமரணமடைந்த அப்போராளிகளாவார்

ஒரு இளைஞனின் சராசரி உணர்ச்சிகளையும் தன்னிலிருந்து களைந்து இம் மண்ணிற்குரித்தான துன்பதுயரங்களை தன் புலன்களிலிருந்து அந்நியப் படுத்தாமல் அவை தனக்குமுரித்தானவை என்ற சிந்தனை வெடிப்பால் 1977 இல் எமது இயக்க அங்கத்துவத்தையும் பின் எமதியக்க மத்திய குழுவின் அங்கத்துவத்தையும் தோழன் "பண்டிதர்" பெற்றான். தன் விடுதலையுணர்வுகட்கு ஒத்திசைவளிக்க மறுதலிக்கும் ஆஸ்துமா வியாதியின் அகோரத்தையோ அல்லது வறுமையை அநுபவிக்கும் குடும்பப் பின்னணியையோ எப்பரிமாணத்திலும் அவன் முதன்மைப் படுத்தியதில்லை. தன் இனத்தின் விடிவிற்கு, தன் ஆளுமையையும் ஆற்றலையும் அளித்த தோழன் பண்டிதர், என்றுமே எளிமையை நேசித்தவனாகவும், இயக்க போராளிகள் மீது தீவிர பற்றுள்ளவனாகவும், தான் சார்ந்த அமைப்பிற்கு என்றும் நேர்மையும் விசுவாசம் மிக்க உறுப்பினனாகவும் இருந்தது மாத்திரமின்றி அவற்றை அநுபவரீதியில் நிதர்சனப்படுத்தியுமிருக்கிறான், அதற்கு எமது இயக்கத்தின் இன்றைய நிர்மாணமே சாட்சி அவனது ஆளுமையினதும் அநுபவங்களினதும் வீச்சுக்களே, எமது இயக்கத்தில் அவன் பாரிய பொறுப்புக்களை வகித்தமைக்குரிய காரணங்களும் கட்டுமானங்களுமாகும். தமிழீழத்தில் நிதி, ஆயுதங்களிற்கு அவனே பொறுப்பாக இருந்தவன், தனக்கு ஓர் தார்மிகப் பொறுப்புக்கூட இருக்கின்றதென்பதை இராணுவம் முற்றுகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிட்ட அக்கணத்திற் கூடவுணர்ந்து வெற்றிகரமாக செயற்படுத்தினுன். முற்றுகையிட்ட அக்கணத்திற்கூட, தன் சுய பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாது அத்தளத்திலிருந்த இரு இளம் சிறுர்களேயும் ஒரு வயோதிபத் தாயுட்பட பெண் சகோதரி ஒருவரையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினுன். அதேபோலவே எமது இயக்க வீரர்கள் முற்றுகையை உடைத்து வெளிவந்தமைக்கும் பொறுப்புமிக்க தீரத்துடன் இறுதிவரை அவன் போராடியமையே காரணமாகும். ஆனுல் இன்று அத்தகைய ஓர் வீரப்போராளி நம் மத்தியிலில்லே அவனது பணிகளே எம்முடன் ஜீவிக்கின்றன.

எமது இயக்கத்தின் பலமான நிர்மணாத்திற்கும் அதன் வளர்ச்சிப் போக்கிற்கும், பல பிரத்தியேக சூழ்நிலேகளில் கூட தம் முழு நேர ஊழியத்தை வழங்கிய எம் தோழர்களாகிய நேரு, சாமி, தவம், சிவா, ரவி ஆகியோரின் மரணத்திலும் இம் மண் ஒரு வாழ்வினைப் பெற்றிருக்கின்றது. சராசரி மனிதர்களாகவே பிறந்து தமிழீழத்தின் நிர்மாணத்திற்கு தமது வலுவான பங்களிப்பை ஈந்ததன் மூலம் தங்களே அவர்கள் தனித்துவப்படுத்திக் கொண்டனர் இவர்களது பணி புனிதத்தன்மை வாய்ந்ததுமட்டுமன்றி எமது இயக்க போராட்ட வரலாற்றிலோர் ஆளுமையின் முதிர்சியையும் காட்டுவதாயுள்ளது. போராட்ட வாழ்வின் முன்னுதாரண புருஷர்களாக இவர்கள் தம்மை சிருஷ்டித்தும் கொண்டனர் இம் மண்ணிற்காய் இவர்கள் மரணித்தாலும் இவர்களது பணிகளே இம் மண் என்றுமே பத்திரப்படுத்தும்.

இதையிட்டு, தமிழீழமக்கள் கலங்குவதும் அநுதாபப்படுவதும்யதார்த்தமெனினும் மாற்றீடாக எங்கள் தாயகத்து மண்ணை மீட்கும் போருக்கு அந்த ஒப்பற்ற மேலான பணிக்கு உங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குவதே தமிழீழ விடுதலேக்காய் மரணித்த போராளிகளுக்கு நீங்கள் செலுத்தும் கௌரவங்களும் அஞ்சலிகளுமாகும்.

மேலும் சிறிலங்கா அரசின் விஷமத்தனமான பிரச்சாரமானது இக்காட்டிக் கொடுப்பிற்கு பொது மக்கள் தான் ஒத்துழைத்தனரெனவும், பெரும்தொகையான ஆயுதங்கள் எம்மிடமிருந்து கைப்பற்றப்பட்டதெனவும், இத்தளமே தமிழ்ழ விடுதலேப் புலிகளின் தலைமையலுவலகமெனவும் கூறுகின்றன, ஆனுல் இவற்றில் எந்தளவு நம்பகமும் இல்லே, பொது மக்களால் எம் தளம் காட்டிக்கொடுக்கப் படவில்லே என்பதனை நாம் நிச்சயப் படுத்திக்கொண்டோம் குறிப்பிட்டளவு ஆயுத இழப்புக்களிருப்பினும் அவை கூட எம் முழு ஆயுத இயலளவின் சொற்பளவேயாகும் தமிழீழமெங்கினும் பரந்துபட்ட எமது கெரில்லாத் தளங்களில் இதுவுமொன்றே தவிர "லலித்" கூறுவது போல் இது எமது தலைமையலுவலகமில்லே.

தமிழீழ விடுதலேயை முன்னெடுக்கும் விடுதலே இயக்கங்கள் பற்றி சிறிலங்கா அரசானது கீழ்த்தரமான பிரச்சாரங்களே பரந்தளவில் மேற்கொள்வதன் மூலம் எமது விடுதலேயை தடுத்துவிட முடியாது. தமிழீழ மக்களின் தொடர்ச்சியான பூரண பங்களிப்புடன் நாம் ஒருமித்து இப்போராட்டத்தை வெற்றி கொண்டே தீருவோம்

வெல்க தமிழீழம் !

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் !!

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலேப் புலிகள்

அரசியற்குழு
தமிழீழ விடுதலேப் புலிகள்

வெளியீடு - பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலேப் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்